இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 25-02-2025

# ஜகதீப் தன்கரே எச்சரிக்கிறார்

இந்தித் திணிப்பை அரசியல் காரணங்களுக்காக நாம் எதிர்ப்பதாகச் சிலர் உளறிக் கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கரே பேசி இருக்கிறார். தமிழ்நாட்டு மக்களுக்கு மொழியின் பெருமையையும் அருமையையும் சொல்லி எச்சரிக்கிறார் தன்கர்.

டெல்லியில் 98 ஆவது அகில பாரதிய மராத்தி சாகித்திய மாநாடு நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர் அவர்கள். மாநிலங்களவை அவைத் தலைவர் அவர். அவரைப் பற்றி அதிகம் அறிமுகம் செய்யத் தேவையில்லை. அந்த மாநாட்டில் ஜகதீப் தன்கர் ஆற்றிய உரையின் சில வரிகளை வாசியுங்கள்…

**“ஒரு நாடு, அதன் கலாச்சார வளம் மற்றும் கலாச்சாரப் பண்பாடுகளால் வரையறுக்கப்படுகிறது. நமது முன்னோர்கள் நமது கலாச்சாரத்தையும் மொழிகளையும் வளர்த்தனர். அதே வழியில் வளர்ப்பது நமது கடமை. இலக்கியத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கைகோத்துச் செயல்படுவதன் மூலம் மட்டுமே இதைச் செழிக்கச் செய்ய முடியும். ஒரு வட்டாரத்தை (பிராந்தியத்தை, மாநிலத்தை) வீழ்த்த வேண்டுமானால் அதைக் கைப்பற்ற வேண்டியதில்லை. அந்த வட்டாரத்தின் மொழியை அழிப்பதுதான் சிறந்த வழி. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நுழைந்த ஆக்கிரமிப்பாளர்கள் அதே வழியைத்தான் கடைப்பிடித்தனர். அவர்கள் கொடூரமானவர்களாகவும் நமது மொழி, கலாச்சாரம், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை வெறுப்பவர்களாகவும் அடக்குமுறையாளர்களாகவும் இருந்தனர். பழிவாங்கும் தன்மையுடனும் கொடுங்கோன்மையுடனும் திகழ்ந்தனர். நமது மொழிகள் வளர முடியாத அளவுக்குத் தடுத்தனர். நமது மொழி தழைக்காவிட்டால் நமது வரலாறு தழைக்காது”** – என்று பேசி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர்.

உண்மையில் நாம் அவருக்கு நன்றி சொல்லியாக வேண்டும். உண்மையைப் பேசியதற்காக! அதுவும், உரக்கப் பேசியதற்காக! அதுவும், இந்தக் காலக்கட்டத்தில் பேசியதற்காக!

**தமிழினத்தை வீழ்த்தவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழர் பண்பாட்டை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது என்று நாம் சொன்னால், அதனை அரசியல் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள் பா.ஜ.க. கைத்தடிகள். ‘ஒரு மாநிலத்தை வீழ்த்த வேண்டுமானால் அதன் மொழியை அழிப்பது தான் சிறந்த வழி’ என்பதையும் சொல்லி, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அந்த வழியைத்தான் கடைப்பிடித்தார்கள் என்பதையும் சொல்லி தமிழ்ச் சமுதாயத்துக்கு எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார் ஜகதீப் தன்கர். இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளாதீர்கள், இறுதி வரை போராடுங்கள் என்று ‘மறைமுகமாக’த் தூண்டி இருக்கிறார் தன்கர்.**

தமிழ் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதுபோன்ற மொழிப் படையெடுப்புகளில் சிக்கியே வருகிறது. வடக்கே இருந்து வந்த ஆரியர்கள் தமிழ்நாட்டின் மீது நடத்திய பண்பாட்டுப் படையெடுப்பாக தங்களது வைதீக மதத்தை, வருணக் கோட்பாட்டை இங்கு திணித்தார்கள். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற தமிழர் பண்பாட்டைச் சிதைத்தார்கள். இறைப்பெயர்களை மாற்றினார்கள். இறைவழிபாட்டு முறையை மாற்றினார்கள். தமிழ் இருந்த இடத்தில் சமஸ்கிருதத்தைப் புகுத்தினார்கள். வேத மறைகளை, தமிழ் மறைகளாக மாற்றினார்கள். சமஸ்கிருதம்தான் தேவபாஷை, தமிழ் நீஷ பாஷை ஆனது. திருக்குறளும் சங்க இலக்கியங்களும் இருந்த இடத்தில் வேத இலக்கியங்களைக் கொண்டு வந்து உட்கார வைத்தார்கள். சங்க இலக்கிய ஓலைச் சுவடிகள் ஆண்டுதோறும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

பல்லவர் ஆட்சியில் வடமொழி ஆதிக்கமே மேலோங்கியது. மகேந்திரவர்மப் பல்லவ மன்னர், ‘மத்தவிலாசப் பிரகசனம்’ என்ற தலைப்பில் வடமொழியில் தான் நாடக நூலை எழுதினார். விஜயநகரப் பேரரசு காலத்தில் தெலுங்கு கோலோச்சியது. இசைத்துறையில் தெலுங்கு முழுமையாக நுழைந்த காலம் இது. இன்று வரை தமிழ்நாட்டு இசை மேடைகளை ஆட்சி செய்கிறது. மராத்திய மன்னர்கள் ஆளுகையில் அந்த மொழியும் உள்ளே வந்து சில பகுதிகளில் பரவியது. மொகலாயர்கள், நவாப்புகள் ஆட்சியில் நிர்வாகத் துறையில் பாரசீக, அரபியச் சொற்கள் நுழைந்தன. ஜில்லா, தாலுக்கா, ஜாமீன், வாய்தா, வக்காலத்து ஆகியவை அப்போது நுழைந்தவைதான். அடுத்து வந்த பிரிட்டிஷ் ஆட்சியானது ஆங்கிலத்தை முழுமையாகக் கொண்டு வந்து புகுத்தியது.

இவர்கள் யாருடைய ஆட்சியாக இருந்தாலும் ‘சமஸ்கிருத’ ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட ஆட்சியாக நடத்தினார்கள். ‘உள்ளூர் விவகாரங்களில் தலையிடுவது இல்லை’ என்ற கொள்கையானது சமஸ்கிருத – வேத மரபுக்கு வசதியாகப் போனது. மாற்று மொழியினர் – மாற்று மதத்தவர் – மாற்றுப் பண்பாட்டவர் படையெடுப்பானது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. அதனால்தான் தமிழ் புறக்கணிக்கப்பட்டது.

சிந்துச் சமவெளி நாகரிக காலத்தில் (கி.மு.3000 – 1500) இந்தியா முழுவதும் பரவியிருந்தது தமிழ். கி.மு. 1500 ஆம் ஆண்டில் இந்தோ – ஆரிய மொழி பேசுவோர் இந்திய நாட்டுக்குள் நுழைந்த பின்னால் தமிழின் பரப்பானது தெற்குப் பகுதியில் மிகமிகச் சுருங்கியதை உணர வேண்டும். வடபகுதியில் இருந்த மொழிகள் அனைத்தையும் இந்தோ – ஆரிய மொழி உள்வாங்கிவிட்டது. அதனால் உள்வாங்க முடியாதது தமிழ் மட்டும் தான். ஏனென்றால் சமஸ்கிருத மரபு வேறு. தமிழ் மரபு வேறு. சமஸ்கிருதம் இல்லாமல் தனித்தியங்கும் தன்மை தமிழுக்கு மட்டுமே உண்டு. இதனை முதலில் மெய்ப்பித்து எழுதியவர் கால்டுவெல். அதனால்தான் கால்டுவெல் மீது இனப்பகையோடு இழிசொற்களைப் பாய்ச்சுகிறார்கள்.

‘சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்த இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளுங்கள்’ என்றார் காந்தி. ‘இந்தி கற்றுக் கொடுத்தால் 15 ஆண்டுகளில் இந்தியா, இந்தி நாடாக மாறிவிடும்’ என்று எடுத்துக் கொடுத்தார் சத்தியமூர்த்தி. ‘இந்தியைக் கற்றுக் கொண்டால் சமஸ்கிருதம் படிப்பது எளிது’ என்று சட்டமன்றத்தில் சொன்னார் அன்றைய முதலமைச்சர் இராஜாஜி. ‘இந்தி வேலைக்காரியாக இருக்கட்டும்’ என்றார் இராஜாஜி. அதனால்தான் பெரியார் இந்த மொழித் திணிப்பை எதிர்த்தார். ‘இந்தியால் தமிழ் அழியாது, தமிழ்ப் பண்பாடு அழிந்து போகும்’ என்றார் பெரியார். **“வயிற்றுப் பிழைப்புக்காக தென்னாட்டில் புகுந்த ஆரியர்கள் மதத்தின் பேரால், கடவுள் பேரால் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விட்டது போல இன்று வேலைக்காரியாக வரும் ஹிந்தி, நாளை தமிழ் நாட்டரசி ஆவது நிச்சயம்”** என்று தமிழர்களைத் தட்டி எழுப்பியவர் பெரியார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (24.02.2025) பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இக்கூட்டத்தில் பல்வேறு தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவல்லிக்கேணி

# பார்த்தசாரதி கோவில் பணியாளர்களுக்கு குடியிருப்பு ஆணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.25–

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்கு சேப்பாக்கம் அய்யா பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி முத்துக்காளத்தி தெரு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட பணியாளர் குடியிருப்புகளில், குடியிருப்பதற்கான ஆணைகளை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு :–

2021 – 2022 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பில், ”சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 18 இடங்களில் உள்ள சிதிலமடைந்த வாடகைக் குடியிருப்புகளை அகற்றி விட்டு புதிய வணிக வளாகம், குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவை ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் ரூ.3.22 கோடி செலவிலும், பொன்னப்பன் சந்தில் ரூ.19.45 இலட்சம் செலவிலும் கட்டப்பட்ட புதிய வணிக வளாகங்களை துணை முதலமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.8.2024 அன்று திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, துணை முதலமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3.2.2025 அன்று சேப்பாக்கம், அய்யாப் பிள்ளை தெருவில் ரூ.94.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 6 குடியிருப்புகளைக் கொண்ட கட்டடம் மற்றும் திருவல்லிக்கேணி முத்துகாளத்தி தெருவில் ரூ.94.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 3 குடியிருப்புகளைக் கொண்ட கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருக்கோயில் பணியாளர்களுக்கு சேப்பாக்கம் அய்யா பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி முத்துக்காளத்தி தெரு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட பணியாளர் குடியிருப்புகளில், குடியிருப்பதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருக்கோயில் பணியாளர்கள் 9 நபர்களுக்கு சேப்பாக்கம் அய்யா பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி முத்துக்காளத்தி தெரு ஆகிய இடங்களில் புதிதாகக் கட்டப்பட்ட பணியாளர் குடியிருப்புகளில், குடியிருப்பதற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர்/செயல் அலுவலர் திருமதி சி.நித்யா, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா: பேரூர் செயலாளர் டி.மோகன்தாஸ் தலைமை!

# இடைக்கழிநாடு பேரூர் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்- பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – ஈரோடு இறைவன்– க.செல்வம் எம்.பி. சிறப்புரை

காஞ்சிபுரம், பிப். 25,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழி நாடு பேரூர் தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், மக்களின் முதல்வர், கழகத்தின் தலைவர் முதலவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (25.2.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு இ.சி.ஆர். சாலை - எல்லையம்மன் கோவில் பகுதியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பேரூர் கழகச் செயலாளர் டி.மோகன்தாஸ் தலைமை வகிக்கிறார். என்.டி.தேவா, டி.செங்கேனி, டி. கண்ணப்பன், ஆ.மணிவண்ணன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

எம்.அருணா, ஆர்.ரஞ்சித்குமார்,பி.சங்கர், சாந்தி முருகேசன், ஆர்.சசிகுமார், எஸ். பக்தவத்சலம், எம்.எச். பக்குருதின் அலி அகமது,டி.சாமிநாதன், எம்.அர்ஜுணன், ஈ.கோமதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இறைவன், சிறுவேடல் க.செல்வம் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் எஸ்.டி.இசை, ப.அப்துல்மாலிக், எஸ்.இனியரசு, டாக்டர் ஆர்.டி.அரசு, ஏ.சிற்றரசு, வி.ஏழுமலை, சம்யுக்தா அய்யனார், கே.எஸ். ஆதிகேசவலு, எம்.வஞ்ரவேலு,ஏ.என்.பாரத், க.பால்ராஜ், கலைச்செல்வி ஜெகநாதன், பேராசிரியர் பி. ஜெகதீசன், டி.பாலசுந்தரம், பி.தேசமுத்து, சி.ஏழுமலை, டி.சந்திரன், எம்.சரன்ராஜ்,பி. திருமலை, செ.தென்றல்ராஜ்,கே.எஸ். ஜெயராமன், ஜி.வி.பெருமாள், வி.விநாயகமூர்த்தி, எஸ்.சரவணன், எம்.முருகதாஸ், டி.சங்கரலிங்கம், வி.ஏ.காஜா மொய்தீன்,எஸ். தட்சிணாமூர்த்தி, ஜி.விண்ணுவர்தன்,அஞ்சுகம் சங்கர், கே.ஆர்.ரவி, கே.அன்னப்பன், சி.கந்தன், ஏ. சுந்தரமூர்த்தி, டி.சீன்வாசன்,டி.கஜேந்திரன், டி.அருள்நிதி, எஸ். நாகூரான், பி.ராஜமுத்து, ஜி.காத்தவராயன், பி.பஷிர், ஏ.தனசேகர், ஆர்.நீலகண்டன், இ. கச்சிமொய்தீன், கே.ராஜகோபால்,வி.முத்துவேல்,கே.முருகன்,வி.முனுசாமி,எஸ்.கருணாகரன்,பி.ராமலிங்கம்,கே. சுந்தரராஜ், பி.ராமச்சந்திரன், ஏ.எல்.சண்முகம், எம்.நாகூர் மீரான், பரமேஸ்★வரி சங்கரலிங்கம், லட்சுமி சங்கர், பி. ஜெய லட்சுமனன் என்கிற பிரபு,இளவரசி சரவணன்,சுசிலா ஆறுமுகம், புவனேஷ்வரி முருகதாஸ்,கே. அருண் பாபு, வஜணா பாஸ்கர், ச.தினேஷ் என்கிற தீபக்,க.ஸ்ரீராமுலு, அ.அப்துல்மாலிக், வினோத்குமார்,நவீனாமுனுசாமி,ர. பூசனம்,அ.சகிலா, தி. கலைவாணி, இ.குணசெல்வி, நீ.பார்வதி,டி.ராஜேந்திரன், இ.துரைராஜ், கே.ஐ. அப்துல் ரக்மான்,ஒ.ஜெ.மாணிக்கம், இ.தாமோதரன், இ. சேகர்,ஆர்.ராமதாஸ், பி.பாலகிருஷ் ணன், எஸ்.பாகரன், எம்.உதயகுமார், எம். ரம்யா,எல்.தேவராஜ், ரஜினி, கே.ரமேஷ், எம்.குமார், பி.கோவிந்தராஜ், டி.சுபாஷ்கார்த்திகாதேவி, பி.சிவா, எம்.தட்சணாமூர்த்தி, ஏ.ஜெயக்குமார், எம்.சக்ரபாணி, ஜி. இளங்கோ, எஸ்.சிவந்தகணி, டி.ஏ.எஸ். மணி, வி.மணலிங்கம், என்.ராமசாமி, டி.தினகரன்,கே.பெருமாள் சாமி,எஸ். நாகப்பன், டி.மதுரை, டி.லட்சுமணன், பி.வாசு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். டி.முகமது ரிப்பாய் நன்றி கூறுகிறார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# ஓராண்டிற்கு காலை உணவு வழங்கும் திட்டம்! 5-வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, பிப்.25 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும் சிறப்புமிகு திட்டத்தின் ஐந்தாம் நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 5ஆம் நாளான நேற்று (24.2.2025) 1) வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, மண்டலம்8, வார்டு97, அயனாவரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, பச்சைக்கல் வீராசாமி தெருவில் 2) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, மண்டலம்8, வார்டு 97அ, அயனாவரம், சோலை தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா ராஜன் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின், பகுதி செயலாளர் வே.வாசு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.லதா வாசு, திரு.செம்மொழி, வட்ட செயலாளர்கள் விக்னேஷ் சீனிவாசன், மனோகரன், இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.